## மத்திய அமைச்சர் திருமதி.ஸ்மிருதி இராணி அவர்களுக்கு அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் நேரில் நன்றி

பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் வழிகாட்டுதலில் எனது கோரிக்கையை ஏற்று பாரதியார் பாடல்களை தேசிய அளவில் அங்கீகரித்து மத்திய மற்றும் மாநில அரசுகளின் பள்ளிகளில் கட்டுரை போட்டிக்கு அழைப்பு விடுத்துள்ள மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி.ஸ்மிருதி இராணி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பலமுறை திருமதி.ஸ்மிருதி இராணி அவர்களை சந்தித்து தமிழை நாடு முழுவதும் விருப்ப பாட மொழியாக அறிவிக்க கோரி வந்தேன். அதில் குறிப்பாக திருக்குறளையும், பாரதியார் பாடல்களையும் நாடு முழுவதும் உள்ள பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க கேட்டு வந்தேன்.

பாராளுமன்ற மேலவை பாரதீய ஜனதா கட்சி உறுப்பினர் திரு.தருண் விஜய் அவர்கள் சென்ற 28.11.2014 அன்று பாராளுமன்றத்தில் உரை ஆற்றிய போது பாரதியார் பிறந்த நாளை நாடு முழுவதும் பள்ளி, கல்லூரிகளில் கொண்டாட வேண்டும் என்றும், திருக்குறளை பாடப்புத்தகங்களில் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டதை திருமதி.ஸ்மிருதி இராணி அவர்கள் ஏற்றுக்கொண்டு பாராளுமன்றத்திலேயே ஒப்புதல் அளித்தார்கள்.

தமிழை அங்கீகரித்த திருமதி.ஸ்மிருதி இராணி அவர்களுக்கு 29.11.2014 அன்று நேரில் சென்று நானும், திரு.தருண் விஜய் அவர்களும் அனைத்து தமிழர்களின் சார்பில் நன்றி தெரிவித்தோம்.

அன்றே பாரதியார் பாடல்களை நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் கற்பிக்க வேண்டும் என்ற எனது நீண்ட நாள் கோரிக்கையை திருமதி.ஸ்மிருதி இராணி அவர்களிடம் வைத்தேன். இதனை அப்போதே ஏற்றுக்கொண்டதாக அறிவித்தார்கள். அதைத்தொடர்ந்து திருமதி.ஸ்மிருதி இராணி அவர்களை இரண்டு முறை சந்தித்து வலியுறுத்தினேன். இன்று காலை திருமதி.ஸ்மிருதி இராணி அவர்களை சந்தித்த போது எனது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்தார்கள்.

திருமதி.ஸ்மிருதி இராணி அவர்கள் தற்போது பாரதியார் பாடல்களை தேசிய அளவில் அங்கீகரித்து நாடு முழுவதும் அரசு பள்ளிகளில் பாரதியார் பிறந்த நாளான 11.12.2014 முதல் பாரதியார் பாடல்களின் சிறப்பு பற்றி பள்ளி மாணவர்களுக்கு கட்டுரை போட்டிகள் ஆங்கிலம் மற்றும் 22 இந்திய மொழிகளில் நடத்தப்படும் என்று இன்று ஆணை பிறப்பித்துள்ளர்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வள்ளுவரின் பிறந்த நாளையும், திருக்குறளையும் பாரதியாரின் பாடல்களையும் தேசிய அளவில் கொண்டாட வேண்டும் என்று இம்மாதம் 2-ஆம் தேதி நடந்த

பாரதீய ஜனதா கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் முன்னிலையில் பாரதீய ஜனதா கட்சியின் 300-க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.வெங்கையா நாயுடு அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

தமிழுக்கு மீண்டும் மீண்டும் அங்கீகாரம் தந்துக்கொண்டு இருக்கின்ற பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கும், திருமதி.ஸ்மிருதி இராணி அவர்களுக்கும், திரு.வெங்கையா நாயுடு அவர்களுக்கும், திரு.தருண் விஜய் அவர்களுக்கும் மற்றும் ஆதரவு தந்து துணை நிற்கின்ற அனைவருக்கும் தமிழன் என்ற முறையில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்குறிப்பு: இது தொடர்பாக அகில இந்திய பாரதீய ஜனதா கட்சி பொதுச் செயலாளர் திரு.முரளீதர ராவ் மற்றும் மத்திய நெடுஞ்சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் ஆகியோர் இன்று பத்திரிக்கையாளர்களுக்கு பேட்டி அளித்த போது எடுத்தப்படம்.